இலங்கை ரஜரட பல்கலைக்கழகம் - 2024

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை ரஜரட பல்கலைக்கழகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 107(5) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும், 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியின் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களானது 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை வெளிப்படுத்தும் வகையில் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த பொதுத்துறை கணக்காய்வு நியமங்களின் கீழுள்ள எனது பொறுப்பு இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பல்கலைக்கழகத்தை தொடர்ந்து செயற்படுத்தும் இயலுமையை தீர்மானித்தல், முகாமைத்துவத்தின் பொறுப்பானதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் பல்கலைக்கழகத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்றிய விடயங்களை வெளிப்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை பரீட்சிக்கும் பொறுப்பு தொடர்புபட்ட தரப்பினர்களால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதானது அவை தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்தில் இல்லாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் எண்ணத்தில் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான புரிந்துரணர்வு பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பாக பொருண்மையான நிச்சயமற்ற தன்மை இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கணக்கீட்டிற்காக நிதியத்தினை தொடர்ச்சியாக செயற்படுத்துவது தொடர்பான அடிப்படையினை ஈடுபடுத்தும் பொருத்த தன்மை தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான

நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டு அதிகாரசபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதாக,

- தனது அதிகாரம் கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்க இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

1.5 நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணங்கமின்மைகள்

	உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	தொலைதூர மற்றும் தொடர்ச்சியான கல்வி மையத்தின் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 15.6 மில்லியன் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தமை, பிரயோக விஞ்ஞான பீடத்தின் காணியில் கட்டிடங்களை நிர்மாணிப்பது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 2.38 மில்லியனை காணியாக காட்டுதல், வாகனங்களின் பெறுமதி ரூபா	தொலைதூர மற்றும் தொடர்ச்சியான கல்வி மையத்தின் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 15.6 மில்லியன் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் ரூபா 2.38 மில்லியன் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு முன்னர் காணியில் இருந்த பள்ளங்களுடனான அளவினை நிரப்பி	முன்னைய ஆண்டு கணக்கீட்டு பிழைகளை நிதிக்கூற்றுக்களை திருத்தம் செய்து கடந்த காலத்திற்கு பொருத்தமாக சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	5.1 மில்லியன் மிகையாக கணக்கீடு செய்தல் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய பங்களிப்பு பணத்தை செலுத்தும் போது ரூபா 2.826 மில்லியன் இரண்டு தடவைகள் கணக்கீடு செய்தல் ஆகிய முன்னைய ஆண்டின் கணக்கீட்டு பிழைகள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் கடந்த காலத்திற்கு பொருத்தமாக சரிசெய்யப்படாது மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	தயார்படுத்துவதற்குரிய செலவு என்பதனால் அது காணியின் அபிவிருத்தி செலவாகும். அது காணியின் பெறுமதியில் அதிகரிப்பாகும். ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் கொடுப்பனவுக்காக எழுதப்பட்ட ரூபா 2.826 மில்லியன் முதலாவது கொடுப்பனவை மீண்டும் உரிய கணக்கிற்கு செலவு வைத்து சரிசெய்யப்பட்டுள்ளது.	
(ஆ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 13 மற்றும் 69 ஆம் பந்திகளுக்கு முரணாக பல்கலைக்கழகத்தினால் 2023 நவம்பர் மாத்திலிருந்து பயன்படுத்தி வருகின்ற ரூபா 209.8 மில்லியனான சாக்கடை மற்றும் கழிவு நீர் சுத்திரிப்பு முறைமையானது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்படாது நடைமுறை வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களும் நடைமுறை வேலையும் அப்பெறுமதியால் முறையே குறைத்தும் அதிகரித்தும் நிதிக்கூற்றுககளில் காட்டப்பட்டிருந்தது. அதன் காரணமாக மீளாய்வாண்டிற்குரிய ரூபா 20.9 மில்லியன் பெறுமானத் தேய்வு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	2023 ஆம் ஆண்டிலிருந்து இந்த சாக்கடை மற்றும் கழிவுநீர் முறைமை பல்கலைக் கழகத்தின் பாவனைக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தும் இச்செயற்திட்டத்தினை நிர்மாணித்த ஒப்பந்தக்காரரினால் அதன் இறுதி விலைப் பட்டியலினை கொடுப்பனவிற்காக சமர்ப்பித்து செயற்திடத்தினை பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைக்கும் வரை சொத்துக்களாக கணக்கீடு செய்யும் இயலுமை இல்லை.	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் 65 ஆம் பந்தியின்	பல்கலைக்கழகத்தின் நிலையான சொத்துக்களில் 85,000 அளவிலான	-மேற்படி-

	பிரகாரம் நடைமுறையற்ற சொத்துக்களின் ஆக்கபூர்வமான ஆயுட் காலத்தினை வருடாந்தம் மீளாய்வு செய்யாமையின் காரணமாக முழுமையாக பெறுமானத் தேய்வு செய்த ரூபா 1,119.97 மில்லியன் கிரயமான சொத்துக்களின் 07 தொகுதிகள் இன்னும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதற்கிணங்க உருவாகியுள்ள மதிப்பீடு செய்யப்பட்ட தவறினை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 03 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பொருட்கள் உள்ளதுடன் மட்டுப்படுத்தப்பட்ட ஆளணியினருடன் இலகுவாக இச்செயற்பாட்டினை மேற்கொள்ள முடியாது	
(ஈ)	இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 11 இன் 117 ஆம் பந்திக்கு முரணாக ரூபா 297.77 மில்லியன் தொகையான 04 மூலதன ஒதுக்கத்தினை 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிறுத்திவைக்கும் இலாபத் திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த ரூபா 218.4 மில்லியன் பணம் 2019 ஆம் ஆண்டில் விவசாய பீடத்தின் புதிய பயிர்ச் செய்கை நிலத்தை பெற்றுக்கொள்வதற்காக திறைசேரியிடமிருந்து பெற்ற பணம் ஆனதுடன் அது மூலதன ஒதுக்கத்தின் கீழ் காட்டப்பட்டுள்ளது. அது 2025 ஆம் ஆண்டில் பொது ஒதுக்கத்திற்கு மாற்றப்படும். மிகுதிப் பணம் திறைசேரியிடமிருந்து மூலதன நிதி ஏற்பாட்டின் கீழ் மற்றும் தொழில்நுட்ப பீடத்தினை நிர்மாணிப்பதற்காக பலக்லைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடமிருந்து மூலதன நிதி ஏற்பாட்டின் கீழ் பெற்ற பணம் எனவும் இன்னும் செலவு செய்யப்படாததனால் மூலதன நிதியின் கீழ் காட்டப்பட்டுள்ளது எனவும தெரிவிக்கிறேன்.	-மேற்படி-
(உ)	ஒரு வெளிநாட்டு செயற்திட்டத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்டு மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்திற்கு ஒப்படைத்திருந்த ரூபா 4,370.57	நியமத்தின் 14(ஆ) பந்தியின் பிரகாரம் சொத்துக்களின் பெறுமதியினை நம்பகரமான முறைமையில் தீர்மானிக்க முடியாததனால் இக்கட்டிடத்தினை	-மேற்படி-

	மில்லியன் ஆன புதிய தொழில்நுட்ப பீடத்தின் கட்டிடம் மற்றும் இரண்டு பஸ்கள் மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழத்திற்கு கிடைத்திருந்த திறைசேரி மற்றும் ஏனைய மூலதன மானியம் மொத்தமாக ரூபா 128.48 மில்லியன் என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 11 இன் 42 மற்றும் 44 ஆம் பந்திகளுக்கு இணங்க சொத்துக்களாகவும் ஆண்டிற்கான மூலதன மானியமாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருக்காமையின் காரணமாக அப்பெறுமதியால் மீளாய்வாண்டிற்கான நிலையான சொத்துக்கள் குறைத்தும் பற்றாக்குறை அதிகரித்தும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.	சொத்துக்களாக கணக்கீடு செய்யும் இயலுமை இல்லை. உரிய இரண்டு பஸ்களும் பல்கலைககழத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தும் அவற்றின் பெறுமதி இதுவரை பல்கலைக்கழகத்திற்கு எழுத்துமூலம் ஒப்படைக்கப்பட்டிருக்காததுடன் அவ்வாறு வழங்கப்படும் வரை அவற்றினை கணக்கேடுகளுக்கு பெற்றுக்கொள்ளும் இயலுமை இல்லை. திறைசேரி மற்றும் ஏனைய மூலதன மானிய பணம் உரிய குறிக்கோளுக்காக செலவு செய்யப்பட வேண்டியதுடன் வருமானத்திற்கு பெற்றுக்கொள்ள முடியாது.	
(ஊ)	2020 -2023 காலப்பகுதியின் போது பல்கலைக்கழகத்திற்கு வெளிநாட்டு செயற்திட்டத்தின் மூலம் கிடைத்த ரூபா 428.97 மில்லியன் பெறுமதியான சொத்துக்களானது உரிய சொத்துக்களைப் பெற்ற ஆண்டின் பிரகாரம் கணக்கீடு செய்யப்படாது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 11 இன் பிரகாரம் மீளாய்வாண்டில் பரிமாற்றம் இல்லாத கொடுக்கல் வாங்கல்களிலிருந்து பெற்ற வருமானமாகவும் அச்சொத்துக்களுக்குரிய ரூபா 214.63 ஆன திரண்ட பெறுமானத் தேய்வு மீளாய்வாண்டின் ஒரு செலவாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இக்காரணத்தினால் அச்சொத்துக்களின் தேறிய பெறுமதியான ரூபா 214.34 மில்லியனால் ஆண்டிற்கான பற்றாக்குறை குறைத்து நிதிக்	செயற்திட்டம் முடிவடையும் வரை அச்சொத்துக்கள் செயற்திட்டத்திற்கே சொந்தமானது என்பதனால் வெளிநாட்டு செயற்திட்டங்களிலிருந்து பெற்ற இச்சொத்துக்கள் முன்னைய ஆண்டுகளுக்கான குறிப்புக்களின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்ட முடிவின் போது ஆரம்பத்திலிருந்தது. கொள்வனவு செய்யப்பட்ட அனைத்து சொத்துக்களும் இருப்புக்களை (Inventory) பரீட்சித்து ஆவணங்களை தயாரித்து அவற்றின் கிரயத்தை மீளாய்வாண்டின் போது கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சொத்துக்கள் பெற்ற ஆண்டினை அடிப்படையாகக் கொண்டு கடந்த காலத்திற்கு பொருத்தமாக நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்காய்வு அபிப்பிராயம்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	2016 ஆம் ஆண்டின் போது 11.2 மில்லியன் செலவு செய்து பெறுப்பேற்கப்பட்டிருந்த 16 உத்தியோகபூர்வ இல்லங்களை கட்டிடங்களாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக காணிகளாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையின் காரணமாக காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி அத்தொகையால் முறையே அதிகரித்தும் குறைத்தும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. இது தொடர்பாக ரூபா 560,000 ஆன வருடாந்த பெறுமானத் தேய்வு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	2016 ஆம் ஆண்டில் பொலிஸ் தலைமையகத்திற்கு ரூபா 11.2 மில்லியன் பணம் செலுத்தியதன் பின்னர் 16 உத்தியோகபூர்வ இல்லங்களுடனான காணி பொறுப்பேற்கப்பட்டது. பொறுப்பேற்ற சந்தர்ப்பம் வரை நிர்மாணிக்கப்பட்ட இந்த 16 வீடுகள் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ள முடியாத ஒடைந்த நிலையல் இருந்தன. அதற்கிணங்க அவற்றிற்கு பெறுமதி இல்லாததனால் செலுத்திய பணம் இக்காணியை பெற்றுக்கொள்வதற்கான செலவாகக் கருதி கணக்கீடு செய்தல் சரியானதாகும்.	உரிய காணி இன்று வரை பொறுப்பேற்கப்பட்டிருக்காத துடன் பணம் செலுத்தப்பட்டது உத்தியோகபூர்வ இல்லத்தினை பொறுப்பேற்பதற்கு என்பதனால் கட்டிடமாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். உத்தியோகபூர்வ இல்லம் உடைந்து காணப்படுமாயின் சேத நட்டத்திற்காக ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2012 - 2016 காலப்பகுதியின் போது இலவசமாக ஒப்படைக்கப்பட்டிருந்த 06 அரசாங்க காணிகள் 2023 ஆம் ஆண்டின் போது ரூபா 1,269.82 மில்லியனுக்கு மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யும் போது மூலதன மானியமாக கணக்கீடு செய்யப்படாது மீள்மதிப்பு ஒதுக்கமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	இக்காணிகள் பல்கலைக்கழகத்தில் தொடக்கத்திலிருந்தே கணக்கேடுகளில் சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்தது. எனினும் உரிய ஆவணங்களை தயாரித்ததன் பின்னர் பல்கலைக்கழகத்திற்குரிய இக்காணி தற்பொழுது மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.	மூலதன மானியமாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	பிணை உடன்படிக்கைகளை மீறியுள்ள விரிவுரையாளர்கள் உள்ளடங்கலாக உத்தியோகத்தர்களிடமிருந்து	நிதிக்கூற்றுககளை சமர்ப்பிக்கின்ற திகதி வரை இந்த 11 விரிவுரையாளர்கள் பிணைகளை மீறியமை	பிணை உடன்படிக்கைகளை மீறிய திகதியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் சொத்துக்களாக கணக்கீடு

	அறவிட வேண்டிய மொத்தமாக ரூபா 138.71 மில்லியன் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	சம்பந்தமாக இறுதி அங்கீகாரம் நிருவாக சபைகபகு சமர்ப்பிக்கப்படவில்லை. கணக்கு கூற்றுக்களுக்கு எடுக்கப்படுவது நிருவாக சபை அங்கீகரித்ததன் பின்னர் என்பதனால் இந்த 11 உத்தியோகத்தர்களின் பிணை மீறலானது 2025 ஆம் ஆண்டின் போது கணக்கு கூற்றுக்களுக்கு கொண்டு வரப்படும்.	செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	சுயநிதி உருவாக்க செயற்பாடுகளின் கீழ் மீளாய்வாண்டின் போது உழைக்கப்பட்டிருந்த ரூபா 159.2 மில்லியன் வருமானம் மற்றும் ரூபா 71.6 மில்லியன் செலவுகளில் மீளாய்வாண்டிற்குரிய வருமானமும் செலவுகளும் அட்டுறு அடிப்படையில் அடையாளம் காணப்பட்டு கணக்கீடு செய்யப்படாது ரூபா 39.03 மில்லியன் வருமானம் மற்றும் செலவுகளாக நிதி செயலாற்றல் கூற்றில் செம்மையாக்கப்பட்டிருந்தது.	வெளி கற்கை நெறிகள் சம்பந்தமாக கணக்கு வைத்தலானது 4/2016 ஆம் இலக்க பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படுகன்றது. அந்த சுற்றறிக்கையின் 5.5 ஆம் பிரிவின் கீழ் கணக்கு வைக்கப்பட வேண்டிய முறைமை தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.	சுயநிதி உருவாக்கல் செயற்பாடுகளிலிருந்து உழைக்கின்ற வருமானமும் அதற்குரிய செலவுகளும் அட்டுறு அடிப்படையில் நிதிக்கூற்றுக்களில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(உ)	2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இருப்பு மீதியானது நிதிக்கூற்றுக்கள் மற்றும் இருப்பு மீளாய்வு அறிக்கைகளின் பிரகாரம் ஒப்பீடு செய்யும் போது ரூபா 6.68 மில்லியன் இணக்கமின்மை காணப்பட்டது.	இந்த வித்தியாசத்தை தேடிப்பார்த்து கணக்கிணக்கம் செய்யுமாறு களஞ்சிய நிருவாக நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக இருக்கின்ற வழங்கல் பிரிவிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.	உரிய வித்தியாசத்திற்கான காரணத்தை அடையாளங்கண்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஊ)	மீளாய்வாண்டின் போது மீள்மதிப்பு ஒதுக்கம் மற்றும் பொது ஒதுக்கத்திற்கு மேற்கொள்ளப்பட்ட முறையே ரூபா 17.01 மில்லியன் மற்றும் ரூபா 22.26 மில்லியன் செம்மையாக்கல்கள் சம்பந்தமாக உரிய தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.	அதிக அளவிலான கொடுக்கல் வாங்கல்கள் இந்த வித்தியாசத்திற்கு காரணம் என்தனால் அந்த அனைத்து கொடுக்கல் வாங்கல்களையும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் நடைமுறைச் சாத்தியமற்றதாகும்.	நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்படுகின்ற செம்மையாக்கல்களுக்குரிய விபரம் நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(எ)	மீளாய்வாண்டின் போதும் முன்னைய 03 ஆண்டுகளின் போதும் பல்கலைக்கழகத்தின் 02 வங்கி கணக்குகளுக்கு நேரடியாக செலவு வைக்கப்பட்டிருந்த மொத்தமாக ரூபா 1.84 மில்லியன தொகையை சரியாக அடையாளங்கண்டு கணக்கீடு செய்யப்படாது மீளாய்வாண்டிற்கான நிதி நிலைமை கூற்றில் பல்வேறு வைப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.	வங்கி கணக்குகளுக்கு பல்வேறு காரணங்களுக்காக பணம் வைப்புச் செய்யப்படுகின்றன. அந்த வைப்புக்கள் நேரடியாக வங்கியில் வைப்புச் செய்யப்படுவதனால் அவை அடையாளங்காணப்படும் வரை இந்த வைப்புக் கணக்கில் பதிவு செய்யப்படுகின்றன. இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் இவற்றினை வருமானத்திற்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வங்கிக்கு மேற்கொள்ளப்பட்டுகின்ற நேரடி செலவுவைத்தல்களை சரியாக அடையாளங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைதுத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

	சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு	இணக்கமின்மைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ)	1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு	உரிய அமைச்சரின் மற்றும் நிதி அமைச்சரின் அங்கீகாரமின்றி பல்கலைக்கழகத்தினால் ரூபா 404.18 மில்லியன் நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டில்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது.	நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேரி உண்டியல்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளுக்காக தேவையான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நிதி அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டு ள்ளது.	அதிகாரச்சட்டத்தி லுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச்சட்டத்தி ன் 16 ஆம் பிரிவு மற்றும் 1982 இன் 03 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய (திருத்திய)	ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்பு பணம் முறைப்படியாக அனுப்பிவைக்கப்படாமையி ன் காரணமாக பல்கலைக்கழத்தினால் 2024 ஆம் ஆண்டில் ரூபா 1.105 மில்லியன் மிகைக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.	ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்காக பங்களிப்பு பணத்தை முறைப்படியாக அனுப்பிவைக்காமை யின் காரணமாக ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு ரூபா 1.105 மில்லியன் மிகைக் கட்டணம் செலுத்துவதற்கு தெரிவிக்கப்பட்டது.	அதிகாரச்சட்டத்தி லுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க பங்களிப்பு பணத்தை உரிய காலப்பகுதிக்குள் செலுத்த வேண்டியதுடன் மிகைக்கட்டணத்தை த செலுத்துவதற்கான காரணம் மற்றும் அதற்கு

	அதிகாரச் சட்டத்தின் 27 ஆம் பிரிவு		இது 03 மாதங்கள் பணம் அனுப்புதல் தொடர்பான மிகைக் கட்டணமாகும்.	பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களை அடையாளம் காண்பதற்காக தேவையான பரீட்சிப்புக்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) மற்றும் 38(2) ஆம்ப பிரிவுகள்	ஒவ்வொரு நிறுவனத்தினதும் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்படுகின்றது என சான்றுபடுத்த வேண்டியதுடன் அந்த முறைமையின் வினைத்திறன் தொடர்பாக அவ்வப்போது எழுத்துமூலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமரப்பிக்கப்பட வேண்டிய போதிலும் பல்கலைக்கழகத்தினால் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.	இந்த நடவடிக்கை எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளப்படும்.	தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கும் இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 05 ஆம் பிரிவு மற்றும் 2019 நவம்பர் 25 ஆந் திகதிய 09/2019 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை	தொடர்புபட்ட பிரமாணங்களுக்கு இணங்க பல்கலைக்கழகத்தினால் வீட்டு வாடகை அறவீடு செய்யப்படாமையின் காரணமாக குடும்ப அலகு உத்தியோகபூர்வ இல்லங்களில் வசிக்கின்ற 36 நபர்களிடமிருந்து 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகள் தொடர்பாக ரூபா 6.76 மில்லியன் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் தனி அலகு உத்தியோகபூர்வ இல்லத்திற்காக அரசாங்க மதிப்பீட்டாளரின்	இச்சுற்றறிக்கை சம்பந்தமாக பல்கலைககழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் விசாரித்த சந்தர்ப்பத்தில் ரஜரட பல்கலைக்கழகம் கஸ்டப் பிரதேசத்தில் அமைந்துள்ளதனால் வீட்டு குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் வீட்டு வாடகையினை அறவீடு செய்வதற்கு பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவினால் தெரியப்படுத்தப்பட்டது.	தாபன விதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளுக்கும் இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

			பொருளாதார வாடகை பெற்றுக்கொள்ளப்படாது மாதாந்தம் ரூபா 400 இற்கும் ரூபா 750 இற்கும் இடைப்பட்ட ஆகக்குறைந்த வாடகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.	எவ்வாறாயினும் கணக்காய்வு ஐய வினாக்கயின் பின்னர் புதிய நிருவாக சபையினால் இது சம்பந்தமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் மீண்டும் தெளிவுபடுத்தலினைப் பெற்று அது சம்பந்தமாக தீர்மானம் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	
(உ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை				
	(i)	நிதிப் பிரமாணம் 507(2) மற்றும் 11 ஆம் பின்னிணைப்பு	2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 16,849 மில்லியன் கிரயமான நிலையான சொத்துக்கள் சம்பந்தமாக ஒரு பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.	பல்வேறு காரணங்களின் அடிப்படையில் இச்செயற்பாடு தாமதமடைந்துள்ளது. எவ்வாறாயினும் 2025 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்வதற்கு திட்டமிடப்பட்டு வருகின்றது.	நிதிப்பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
	(ii)	நிதிப்பிரமாணம் 570 மற்றும் 571	02 ஆண்டுகளிலிருந்து 04 ஆண்டுகள் வரையான காலப்பகுதியாக காணப்பட்டு வரும் மொத்தமாக ரூபா 1.69 மில்லியனனான கேள்வி வைப்புக்கள் மற்றும் 02 ஆண்டுகளிலிருந்து 14 ஆண்டுகள் வரையான காலமாக காணப்பட்டு வரும் மொத்தமாக ரூபா 51.51 மில்லியனான ஒப்பந்த மற்றும் நானாவித நிறுத்திவைத்தல் பயணங்கள் சம்பந்தமாக தொடர்புபட்ட நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மீண்டும் செலுத்த வேண்டிய கேள்வி வைப்புக்களை செலுத்துவதற்கு வேண்டுதல் செய்யுமாறு தெரியப்படுத்தியிருந்தும் பற்றுச் சீட்டுக்களின் தொடக்க பிரதி முதலியவை இல்லாமையினால் செலுத்துவதற்கு சமர்ப்பிக்கப்படவில்லை..	-மேற்படி-

(iii)	நிதிப்பிரமாணம் 756(6)	2023 மற்றும் 2024 ஆம் ஆண்டின் பொருள் மீளாய்வு நடவடிக்கை 2025 யூன் மாதமளவில் பூர்த்திசெய்யப்பட்டு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	ஊழியர் பற்றாக்குறையின் காரணமாக பொருள் மீளாய்வினை உரிய வேளைக்கு மேற்கொள்ள முடியாதிருந்தது. எவ்வாறாயினும் அந்த அறிக்கையினை முடியுமான அளவு விரைவாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	-மேற்படி-
(ஊ)	உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பந்தி	கல்வி பதவியணியினரின் வருகை மற்றும் வெளிச் செல்லல் உறுதிப்படுத்தப்படாது மீளாய்வாண்டின் போது ரூபா 1,571.3 மில்லியன் சம்பளமும் படிகளுமாக செலுத்தப்பட்டிருந்தது.	இது பல ஆண்டுகளாக ஐய வினா விடுக்கப்பட்ட விடயமானதுடன் பல்கலைக்கழ முறைமையானது இந்த வகையிலேயே காணப்படுகின்றது.	உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(எ)	2023 சனவரி 18 ஆந் திகதிய BD/HRD/126/214/19/ 2023 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தி	பிணை உடன்படிக்கையினை மீறியதன் அடிப்படையில் அறவிடப்பட்ட ரூபா 52.9 மில்லினை திறைசேரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பிணை உடன்படிக்கையை மீறியமை சம்பந்தமான பணத்தை பயன்படுத்த வேண்டிய முறைமை தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் சில சுற்றறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன. அச்சுற்றறிக்கையின் பிரகாரம் பல்கலைக்கழகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	திறைசேரியினால் வழங்கப்பட்டுள்ள சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஏ)	பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மானியம் சம்பந்தமான வழிகாட்டிக் கோவையின் 2.10 ஆம் பந்தி	ஆராய்ச்சி முற்பணங்கள் 90 நாட்களுக்குள் தீர்த்து வைக்கப்பட வேண்டிய போதிரும் 11 விரிவுரையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மொத்தமாக ரூபா 1.158	கணக்காய்வினால் குறிப்பிடப்பட்டுள்ள 11 விரிவுரையாளர்களில் இரண்டு நபர்களைத் தவிர்த்து மிகுதி 09 நபர்களும்	பலக்லைக்கழத்தின் ஆராய்ச்சி மானியங்கள் சம்பநதமாக வழிகாட்டிக் கோவையின் பிரகாரம்

		மில்லியன் முற்பணங்கள் வழங்கப்பட்டு 01 ஆண்டிலிருந்து 15 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்தும் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	தற்பொழுது பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணத்தை தீர்த்துவைத்துள்ளனர். தீர்த்துவைக்கப்படாத இரண்டு நபர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஐ)	உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவையின் V ஆம் அத்தியாயத்தின் 7.6.1 மற்றும் 7.6.2 ஆம் பந்திகள் மற்றும் 2022 யூன் 22 ஆந் திகதிய 02/2022 ஆம் இலக்க பலக்லைக்கழ மானியங்கள் ஆணைக்குழுவின் உள்ளக கணககாய்வு சுற்றறிக்கை	27 விரிவுரையாளர்கள் மற்றும் ஏனைய இரண்டு உத்தியோகத்தர்களால் மீறப்பட்டிருந்த ரூபா 257.472 மில்லியன் பிணை பெறுமதி தொடர்பாக உத்தியோகத்தர்களிடமிருந்து அல்லது பிணையாளர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு அல்லது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பிணைகளை மீறியுள்ள உத்தியோகத்ரத்களிடமிருந்து பணம் அறவிடப்பட்டு வருகின்றது.	உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் மற்றும் உரிய சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து உரிய பணத்தை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.7 வரி பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

கணக்காய்வு அபிப்பிராயம்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் 2023 ஏப்ரல் 06 ஆந் திகதிய SEC/2023/E/02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி மற்றும் 2023 யூலை 18 ஆந் திகதிய SEC/2023/02 ஆம் இலகக சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் ஊழியர்களின் வருமானத்தின் அடிப்படையில் செலுத்த வேண்டிய முற்பணங்கள் தனிப்பட்ட வருமான வரியை (APIT) கணிப்பீடு செய்யும் போது பல்கலைக்கழத்தினால் எரிபொருள்	இது அனைத்து பல்கலைக்கழகங்களினாலும் பின்பற்றப்படுகின்ற முறைமையானதுடன் பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழுவினால் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு ஒரு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இதற்காக தெளிவான தீர்மானம் எடுக்கும் வரை இந்த முறைமையில்	உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டம் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

மற்றும் போக்குவரத்து படிகளில் 75 சதவீதம் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாமையின் காரணமாக மீளாய்வாண்டின் போது 11 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 2.58 மில்லியன் உழைக்கும் போதே செலுத்தும் வரி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.	கணிப்பீடு செய்யப்படும்.	

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சபையின் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 171,988,597 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 274,616,654 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 102,628,057 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு திறைசேரி ஊதிய மானியங்கள் ரூபா 233,060,000 இனாலும் மூலதன மானியங்கள் ரூபா 244,778,292 இனாலும் அதிகரித்தல் பிரதான காரணமாக இருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறன்னிமைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
48.7 ஹெக்டயர் அளவிலான 06 காணிகளின் சட்டரீதியான உரிமையை 2025 யூன் மாதமளவில் பல்கலைக்கழத்திற்கு ஒப்படைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.	காணிகளை ஒப்படைப்பதற்கு பிரதேச செயலாளர்களுடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகினறது.	துரிதமாக பலக்லைக்கழத்தினால் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும.

3.2 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
1998 ஆம் ஆண்டின் போது அரசாங்க பசளைக் கம்பனிக்குச் சொந்தமான 15 ஏக்கர் காணி 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 48 மில்லியனுக்கு மதிப்பீடு செய்யப்பட்டு பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்திற்கு பொறுப்பேற்பதற்கு 2013 ஆம் ஆண்டின் போது நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே காணியை பொறுப்பேற்பதற்காக ரூபா 239.6 மில்லியன் செலவு செய்து அதில் 09 ஏக்கர் அளவான காணி பொறுப்பேற்கப்பட்டு 2024 திசெம்பர் 31	உரிய பணம் பகுதி பகுதியாக கிடைத்ததன் காரணமாக இழப்பீட்டு வட்டியினை செலுத்த வேண்டி ஏற்பட்டது. இக்காணியின் உரிமையாளரால் வழங்குவதற்கு இணங்கி கொள்ளப்பட்ட சில காணிப் பகுதிகளை மாத்திரம் பெற்றுக்கொள்வதற்கு இணங்கிக் கொள்ளப்பட்டிருந்ததுடன் உரிய காணியின் மதிப்பீடு	முறையான விசாரணைகளை மேற்கொண்டு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

ஆந் திகதி வரை ஆளணியினருக்காக உத்தியோகபூர்வ இல்லத்தினை நிர்மாணிக்கும் செயற்பாடு மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தது. பல்கலைக்கழத்தினால் போதியளவு நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்படாது துரிதமாக காணியை பொறுப்பேற்பதற்காக காணி சுவீகரிப்பு அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் 38(அ) உப கட்டளை வழங்குதல் மற்றும் இழப்பீடு செலுத்துதல் தாமதமடைந்ததன் அடிப்படையில் ரூபா 55.56 மில்லியன் இழப்பீட்டு வட்டியினை செலுத்த வேண்டியும் ஏற்பட்டிருந்தது. மேலும் காணியை பொறுப்பேற்பதற்காக கிடைத்த ரூபா 5.29 மில்லியனை திறைசேரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது பல்கலைக்கழக அபிவிருத்தி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

அரசாங்க மதிப்பீட்டாளர்களால் மேற்கொள்ளப்பட்டது. மத்திய நுவரகம்பலாத பிரதேச செயலகத்தின் மூலம் இந்த இழப்பீட்டு பண கணிப்பீடு செய்யப்பட்டதுடன் உரிய கணிப்பீட்டிற்கு இணங்க இழப்பீட்டுப் பணம் செலுத்தப்பட்டது. இந்த காணியை பொறுப்பேற்பதற்கும் குறிக்கோளான விவசாயப்பீடத்தின் கல்வி நடவடிக்கைகளை பேனுவதற்காகவாகும். அதற்காக முறையான நுழைவுப் பாதையும் பீடத்தில் தற்பொழுது இருக்கின்ற பண்ணைக் காணியிலிருந்து இலகுவாக உட்செல்லும் இயலுமை இருத்தல் வேண்டும். அவ்வாறே நீர் மூலங்களைத் தோற்றுவித்தல் மிகவும் முக்கியமான காரணியாகும். எனவே காணியின் வணிகப் பெறுமதியினை விட மேற்கூறிய குறிக்கோளுக்காக இக்காணியின் தெரிவு செய்யப்பட்ட பகுதியை கொள்வனவு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. அரசாங்கத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட இக்காணியின் பயன்படுத்தும் உரிமையை ஒப்படைத்தல் காணி உரிமையாளரால் நிராகரிக்கப்பட்டுள்ளது என அரசாங்க அதிபருக்கு பிரதேச செயலாளரினால் தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் அதற்காக நீதிமன்ற நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு 2014 சனவரி 22 ஆந் திகதி அனுராதபுரம் நீதவான் நீதிமன்றத்தின் பதிவாளருக்கு தெரிவிக்கப்பட்டது. இக்காலத்தில் உரிய காணி உரிமையாளரால் 15 ஏக்கர் அளவான காணியில் 09

	ஏக்கர் காணிப் பகுதியை வழங்குவதற்கு இணக்கப்பாட்டினை வெளிப்படுத்தி பிரதேச செயலகத்திற்கு தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக பல்கலைக்கழகத்தின் இணக்கப்பாட்டினை விசாரித்ததன் பின்னர் நிருவாக சபையினால் உத்தேச காணிப் பகுதி விவசாய பீடத்தினை விரிவுபடுத்துவதற்கு மாத்திரம் என தீர்மானிக்கப்பட்டதன் பின்னர் அக்காணிப் பகுதியை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த நிருவாக சபை தீர்மானத்திற்கு இணங்க உப வேந்தரின் 2014 பெப்ரவரி 25 அந் திகதிய கடிதத்தின் மூலம் நீதிமன்ற நடவடிக்கையை தற்காலிகமாக நிறுத்திவைப்பதனைப் போல மத்திய நுவரகம்பலாத பிரதேச செயலகத்திற்கு தெரிவிக்கப்பட்டது. பல்கலைக்கழக நிதியத்திற்கு கிடைத்த இப்பணத்தில் மிகுதியான ரூபா 5.29 மில்லியன் பணம் பல்கலைக்கழக அபிவிருத்தி நிதியத்தில் நிறுத்திவைக்கட்டுள்ளதனால் இக்கணக்கிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.	

3..3 செயற்திட்டம் அல்லது மூலதன வேலைகளில் தாமதங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
(அ) நிர்மாண நடவடிக்கைகள் 2021 ஒக்தோபர் 31 ஆந் திகதியளவில் முடிவு செய்யப்பட வேண்டியிருந்த ஒப்பந்த பெறுமதி ரூபா 356.32 மில்லியனான தொழில்நுட்ப பீட கட்டிடத்தின் கட்டம் II	இச்செயற்திட்டத்தினை பரஸ்பர இணக்கப்பாட்டின் அடிப்படையில் கலைப்பதற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் ஒப்பந்தகாரரினால் தற்பொழுது உரிய ஆவணங்களை	முற்பணப் பிணை மற்றும் செயலாற்றல் பிணைகளை துரிமாக பணமாக்கி கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	மற்றும் கட்டம் III உடன்படிக்கைகளின் பிரகாரம் முடிவு செய்யப்படாது 2024 நவபம்ர் 25 ஆந் திகதியிலிருந்து கைவிடப்பட்டிருந்தது. எனினும் முறைப்படியாக ரூபா 71.26 மில்லியன் மற்றும் ரூபா 17.81 மில்லியன் ஆன முற்பண பிணைகள் மற்றும் செயலாற்றல் பிணைகள் காலாவதியாகுவதற்கு முன்னர் அவற்றினை பணமாக்கி கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	வழங்குதல் இடம்பெற்று வருகின்றது. உரிய ஒப்பந்தக்காரரினால் ஒப்பந்த பிணை மற்றும் செயலாற்றல் பிணை நீடிப்புச் செய்யப்பட்டு பல்கலைக்கழத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.	
(ஆ)	2019 நவம்பர் மாதத்தின் போது ரூபா 156.56 மில்லியன் ஒப்பந்த பெறுமதிக்கு பல்கலைக்கழக விடுதிகளுக்கு சாக்கடை மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமையின் நிர்மாண நடவடிக்கைகளை ஒரு ஆண்டு காலத்திற்குள் பூர்த்தி செய்வதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டு 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் கணக்காய்வுத் திகதியான 2025 மே 30 ஆந் திகதியளவில் முடிவு செய்யப்பட்டிக்கவில்லை.. தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் மற்றும் பல்கலைககழக மானியங்கள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல் மற்றும் பொருள் விபரக் குறிப்பின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை மற்றும் விடுதிகளில் இருக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கையை சரியாக அயைடாளங்கண்டு முறைமையை திட்டமிடாமையின் காரணமாக ரூபா 185.94 மில்லியன் செலவு செய்து நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற இந்த முறைமையின் கழிவு நீர் சுத்திரிகரிப்பு செய்யும் தாங்கிகளிலிருந்து நிரம்பி	இந்த ஒப்பந்தம் காணப்பட்ட கொரோனா தொற்றுநோய் மற்றும் பொருளாதார பிரச்சினைகளின் காரணமாக தாமதமடைந்துள்ளது. இச்செயற்திட்டத்திலுள்ள மிகுதியான வேலைகள் அனைத்தும் தற்பொழுது ஒப்பந்தக்காரரினால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. பல்கலைக்கழகத்தில் கழிவுப் பொருள் முகாமைத்துவ பிரிவு காணப்படுவதனால் அதற்காக இந்த கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தலாம். பல்வேறு காரணங்களின் அடிப்படையில் விடுதிகளிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டி ஏற்பட்டுள்ளதனால் எதிர்பார்தத கழிவு நீர் அளவினை விட அதிக நீர் அளவு Peak Time களில் இப்பிரிவிற்கு கிடைக்கின்றது. அதற்கிணங்க மேலதிக சுத்திகரிப்பு அலகினை பொருத்துதல் மற்றும் இந்த அலகின் இயலளவினை அதிகரிக்கச் செய்வதற்காக பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகிய நடவடிக்கைகள் தற்பொழுது பல்கலைக்கழகத்தின் மூலம் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளது.	உடன்படிக்கையின் பிரகாரம் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் அனைத்து துணைக்கருவிகளுடன் நிர்மாண வேலைகள் செய்யப்பட வேண்டியதுடன் மாணவ விடுதிகளின் கொள்ளளவுக்கு ஏற்றவகையில் தேவையான மாற்றங்களை மேற்கொண்டு செயற்திட்டத்தினை வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

வழிகின்றது என அவதானிக்கப்பட்டது. மேலும் முறைமைக்கு பொருத்தப்பட வேண்டிய இடி தாங்கிகள் கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரை பொருத்தப்பட்டிருக்கவில்லை.

3.4 பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
வெளிநாட்டு செயற்திட்டமான Accelerating Higher, Education Expansion & Development Operation (AHED) செயற்திட்டத்தின் கீழ் முகாமைத்துவ கல்விப் பீடத்தில் ரூபா 1.59 மில்லியன் செலவு செய்து ஸ்தாபிக்கப்பட்டிருந்த கணனி மென்பொருள் முறைமை, மனிதநேய பீடத்தில் திருத்தம் செய்யப்பட்ட ஆய்வுகூடம் மற்றும் ரூபா 10.36 மில்லியன் செலவு செய்து பொருத்தப்பட்ட வாயுசீராக்கி மற்றும் கணின இயந்திரம் உள்ளடங்கலாக உபகரணங்கள் 2023 ஆம் ஆண்டிலிருந்து குறைந்த பயன்பாட்டிற்கு உட்பட்டும் பயன்படுத்தப்படாதும் காணப்பட்டன. மேலும் ரூபா 19.75 மில்லியன் செலவு செய்து மூன்று வழங்குனர்களிடமிருந்து பொருள் விபரக் குறிப்பிற்கு முரணான வலு செயற்திறனான இன்வேர்டர் வகையான வாயுசீராக்கம் செய்யாத 96 இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அவற்றில் ஒரு வழங்குனர் ரூபா 8.03 மில்லியனுக்கு 53 வாயு சீராக்கி இய்நதிரங்களை வழங்குவதற்காக இணங்கி இருந்த போதிலும் 20 இயந்திரங்களை மாத்திரம் வழங்கியிருந்தது. ரூபா 805,000 செயலாற்றல் பிணையினை பணமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இந்த மென்பொருள் 2022 ஆம் ஆண்டு வரை பயன்படுத்தப்பட்டன. பின்னர் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் மென்பொருளின் அனுமதிப்பத்திரத்தினை புதுப்பிக்காமல் விடுவதற்கு தீர்மானக்கப்பட்டது. 2024 ஆம் ஆண்டின் அரைப்பகுதியிலிருந்து இந்த கணனி ஆய்வுகூட விரிவுரை மற்றும் செயன்முறை செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை கொள்வனவு செய்யப்பட்ட அனைத்து வாயு சீராக்கி இயந்திரங்களும் இன்வேர்டர் வாழ்கையைச் சேர்ந்ததாகும். இதற்கு முன்னர் இனவேர்டர் வகையான வாயுசீராக்கி இயந்திரம் கொள்வனவு செய்யப்படவில்லை. உடன்படிக்கையின் பிரகாரம் உரிய நிறுவனத்தினால் 53 வாயுசீராக்கி இயந்திரங்கள் வெற்றிகரமாக பொருத்தப்பட்டன. அதற்கிணங்க செயலாற்றல் முறியை பணமாக்க வேண்டிய தேவைப்பாடு இல்லை.	சொத்துக்களை வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் உரிய உடன்படிக்கையின் பிரகாரம் வழங்கலினை மேற்கொள்ளாதிருக்கை கயில் துரிதமாக செயலாற்றல் பிணைமுறியை பணமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மேலும் வழங்கப்பட்டுள்ள சில பதில்கள் பிழையானவை என்பதனால் இது சம்பந்தமாக முறையான விசாரணைகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்

4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரைகள்	சிபாரிசுகள்
2021 நவம்பர் 16 ஆந் திகதிய 1/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட அரசாங்க தொழில் முயற்சிகளை கட்டுப்படுத்துவதற்கான செயற்பாட்டு கையேட்டின் 6.6 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் நிதி ஆண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2025 மே 16 ஆந் திகதி அதாவது 77 நாட்கள் தாமதத்துடன் சமர்ப்பிக்கப்பட்டது.	ஊழியர் பற்றாக்குறையின் காரணமாக இந்த நிலைமை உருவாகியுள்ளது. எதிர்வரும் காலங்களில் நிர்ணயிக்கப்பட்டவாறு நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்தற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்தற்கு நடடிக்கை எடுத்தல் வேண்டும்.